தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-1-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இரண்டாம் பசுமைப் புரட்சியை நோக்கி தமிழகம் வீறுநடை – உழவர் தின விழாவில் வேளாண் துறை அமைச்சர் பெருமிதம்

உழவர் தின விழா 2016 மற்றும் புதிய பயிர் இரகங்கள் வெளியீட்டு விழா வேளாண்மைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் 8-1-2016 இன்று நடைபெற்றது.

இருமடங்கு உற்பத்தி மற்றும் மும்மடங்கு வருமானம் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் தொழில்நுட்ப கருத்துக்காட்சியை முன்னதாக பல்கலைக்கழக இணைவேந்தர் மற்றும் மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்.

பொள்ளாச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் திரு. சக்திவேல், சட்டமன்ற உறுப்பினர் திரு. மலரவன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

திரு. ஏ.கே. செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் சொட்டுநீர்ப் பாசனத்திற்கு 100 சதவிகித மானியம் தந்துள்ள முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது என்று கூறினார். தனிநபர் வருமானம் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 4 இலட்சத்திற்கு மேல் கொண்டு வர வேண்டும் என்ற அரசின் இலட்சியம் நிறைவேற அனைவரும் பாடுபட வேண்டும் என்றார்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., அவர்கள் உழவர்கள் அவர்களுக்கு பயன்பட்ட கருத்துக்களை தங்கள் நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

*கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் முனைவர். கணபதி ப. ராஜ்குமார் அவர்கள் முன்னிலை உரையாற்றினார். வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் கால்நடை, மீன்வளத் துறை அரசு செயலர் திரு. ச. விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.*

*வேளாண் துறை இயக்குநர் முனைவர் எம். ராஜேந்தின், இ.ஆ.ப. அவர்கள் தனது உரையில் மற்ற மாநிலங்கள் போல் அல்லாமல் தமிழகத்தில் விவசாயிகள் முன்னிலையில் பயிர் இரகங்கள் வெளியிடப்படுகிறது. கடந்த **30** ஆண்டுகளில் இல்லாத அளவு மூன்று முறை **101, 110, 128** இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை தமிழகம் செய்து இருமுறை கிருஷி கர்மான் விருது பெற்றுள்ளது. அனைத்து மக்களுக்கும் உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதற்கு உழவர்கள், வேளாண் அறிஞர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் அரசின் திட்டங்கள் ஆகியவை காரணமாகத் திகழ்கின்றன. கரும்பு, நிலக்கடலை, நெல் உற்பத்தித் திறனில் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. சிறுதானிய உற்பத்தி **30** இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. **80** இலட்சம் விவசாயப் பெருமக்களின் நிலங்களில் மண் பரிசோதனை செய்து இந்தியாவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலம் என்று கூறும் அளவில் அனைத்து மாநிலங்களிலும் மண் பரிசோதனை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மதுரை, திருச்சி, கோவை, சென்னை ஆகியவற்றில் மாடித் தோட்டம், அம்மா விதைகள், மேலை நாடுகளில் தொழில்நுட்பங்களை அறிய உழவர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சிக்கு அனுப்புதல் ஆகிய சிறந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், எதிர்காலத்தில் காய்கறி மற்றும் பழங்களைப் பதப்படுத்துதல் குறித்த ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்றும் கூறினார்.*

*பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில், உழவர்கள்தான் குறைந்த நிலம், நீர் கொண்டு மிகுந்த உற்பத்தி செய்ய திறன் படைத்துள்ளார்கள். **42** சதவிகித விவசாயிகள் உள்ள தமிழகத்தில் முன்னிலை தொழிலாக விவசாயத்தை தொடர்ந்து புதிய தொழில்நுட்பங்கள் கடைப்பிடித்து முன்னேற்றம் காண வேண்டும். **30** வருடங்கள் சராசரியாக **70** இலட்சம் டன் உற்பத்தி செய்து வந்த நிலையில் தற்போது **128** இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. தண்ணீர் குறைவில்லாமல் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். பழம், காய்கறிகளை அதிக அளவு விளைவிக்கும் வசதியை தர வேண்டும். அப்போது தமிழ்நாடு இந்தியாவில் முன்னோடி மாநிலமாக திகழும் என்பதில் ஐயமில்லை என்றார். புதிய தொழில்நுட்பங்கள், குறைவில்லா பாசன நீர் ஆகியவை இருந்தால் இருமடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம் என்ற இலட்சியத்தை உறுதியாக அடைந்து விடலாம் என்று கூறினார்.*

மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் துணைத்தலைவர் பொள்ளாச்சி திரு. வ. ஜெயராமன் அவர்கள் தனது சிறப்புரையில், பரம்பிக்குளம் ஆழியாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் ஆண்டு முழுதும் நீர்ப்பாசனம் தரும் வகையில் இஸ்ரேல் பாசன முறையில் சொட்டுநீர்ப்பாசனம் கொண்டு வர வேண்டும் என்றார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரகவளர்ச்சி, சட்டம், நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் தனது சிறப்புரையில் விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டம், மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனத் திட்டம், வறட்சி நிவாரணம், காப்பீட்டுத் தொகை ஆகியவை சிறப்பாக வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக இணைவேந்தர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் தனது விழா பேருரையில் மக்கள்தொகை பெருக்கம், நகரமயமாக்கல், விவசாய நிலம் குறைவு ஆகியவற்றை மீறி வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்து வந்த சிறப்பான திட்டங்களால் உழவர்கள் சிறந்த சாதனை செய்துள்ளனர். மண்ணில் உள்ள சத்துக்களை அறிந்து அதற்கேற்ப உரமிடுதல், நீர் மேலாண்மை செய்தல் ஆகியவைக்கு தமிழகம் இந்தியாவுக்கு முன்னோடியாக உள்ளது. 2013-14ம் ஆண்டு சிறந்த உற்பத்திக்காக கிருஷி கர்மன் விருதினை பெற்றுள்ளது. 2014-15ம் ஆண்டு சிறந்த உற்பத்திக்காகவும் கிருஷி கர்மன் விருதினை பெறவுள்ளது. 100 விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து இஸ்ரேல், நெதர்லாந்து போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பி வேளாண் மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்ப பயிற்சியும் வழங்கப்படுகிறது. 5500 கோடி விவசாயக் கடன் இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சிறப்பு திட்டங்களால் இரண்டாவது பசுமைப்புரட்சியை நோக்கி தமிழகம் வீறுநடை போடுகிறது என்று பெருமிதத்துடன் கூறினார். 33 ஆண்டுகளில் இல்லாத அளவு புதிதாக 3 வேளாண் கல்லூரிகள், 1 தோட்டக்கலைக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

விழாவின் தொடர்ச்சியாக 8 புதிய பயிர் இரகங்கள், 3 இயந்திரங்கள் வெளியிடப்பட்டன. பின்னர் புதிய பயிர் இரக விதைகள் 10 உழவர்களுக்கு வழங்கப்பட்டன.

இளம் வேளாண் சாதனையாளர்கள் விருது ஐந்து இளம் வேளாண்மையாளர்களுக்கும், ஐந்து விவசாயிகளுக்கு வேளாண் செம்மல் விருதுகளும், பின்னர் 9 விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை, வேளாண் காடுகள் செம்மல் மற்றும் பயிர் வாரியாக நெல், மலைவாழை, கரும்பு, கொய்யா, மாங்கனி, வாழை, மாதுளை செம்மல் விருதுகள் வழங்கப்பட்டன. சிறந்த நன்கொடையாளர் விருது சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. பின்னர் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

அங்கக வேளாண்மை, மண்வளப் பாதுகாப்பு, பயிர் இரகங்கள், தென்னையில் புதிய தொழில்நுட்பங்கள், வேளாண் கருவிகள், பயிர்ப்பாதுகாப்பு, பயறுவகை உற்பத்தி தொழில்நுட்பங்கள் உட்பட பல தலைப்புகளில் கருத்தரங்கம் நிகழ்ந்தது.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ஹெ. பிலிப் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இயக்குநர் (ஆராய்ச்சி) முனைவர் ம. மகேஸ்வரன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

இவ்விழாவில், 1000க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர். விழாவில், துணைமேயர், மேற்கு மண்டல தலைவர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்